முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.147/2017**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.07.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 08.07.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர். | விநாயகமூர்த்தி | வயது.. | 50 |
| தந்தை பெயர். | சின்னப்பன் | ஊர்.. | ஸ்ரீமுஷ்ணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. எனது தகப்பனார் சின்னப்பன் என்கிற ரத்தினசாமி என்றால் சரிதான். எனது தந்தையாரின் உடன்பிறந்தவர்கள் பாவாடை ஆசாரியார், ஆறுமுகம் ஆசாரியார், சின்ன பிள்ளை என்கிற கிருஷ்ணமூர்த்தி ஆசாரியார், எனது தாயார் லட்சமி. ரத்தினசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான், கொளஞ்சி, ஜெயந்தி, சிவசங்கரி. சிவசங்கரி இறந்துவிட்டார், நானும் என் தகப்பனாரும எங்கு குடியிருக்கிறோம் என்றால் மேல் கொடிகாள் தெரு, ஸ்ரீமுஷ்ணம் பட்டறைக்கு பக்கத்திலேயே இருக்கிறோம். பட்டறைக்கு நேர்எதிரில் என்னுடைய ஓட்டு கட்டிடம் இருக்கிறது என்றால் சரிதான், தற்போது சிதிலம் அடைத்திருக்கிறது. வழக்கு சொத்திற்கு முன்பு ஏற்கனவே ஓட்டு கட்டிடத்தில் இருந்தோமா என்றால் இரண்டு இடத்திலுமே இருந்தோம். ஓட்டு கட்டிடத்தில் வீடு சிதிலம் அடைந்து, அதற்குள் சாமான் மட்டும் இருக்கிறது.

2. தற்போது பட்டறை இருக்கும் விஸ்தீரணம் 17 செண்ட் இருக்கும். 17 செண்டில் பூர்வீக சொத்து எவ்வளவு என்றால் சுமார் 28 x 106 இருக்கும் செண்ட் அளவு தெரியவில்லை. 17 செண்டில் கிரயம் வாங்கப்பட்டதா என்றால் எனது தகப்பனார் கிரயம் வாங்கினார் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் பெற்றார் என்று தெரியவில்லை. பட்டறை சொத்தில் எனது சித்தப்பாவிற்கு பாகம் இருந்ததா என்றால் எனது அப்பா சித்தப்பாவிடம் இருந்து வாங்கிக்கொண்டார். அவர்களிடம் இருந்து எவ்வளவு விஸ்தீரணம் வாங்கினார் என்று ஞாபகம் இல்லை. மேற்சொன்ன

கிரய பத்திரங்கள் வைத்திருக்கிறேன். எனது தகப்பனார் 09.07.1977 இல் செல்வதுரையிடம் பட்டறைக்கும் மேற்குபுரத்தில் கிரயம் பெற்றிருக்கிறாரா என்றால் சரியல்ல, கிழக்குபுரத்தில் வாங்கியிருக்கிறார். வாதியின் சொத்திற்கும் மேற்குபுரத்தில் அடுத்தார் போல் எனது தகப்பனார் செல்வதுரையிடம் வாங்கினார் என்றால் சரியல்ல. சேல்வதுரையிடம் இருந்து வாங்கியது எந்த பக்கத்தில் என்றால் பட்டறைக்கும் பக்கத்தில் உள்ள பூர்வீக இடத்திற்கும் கிழக்கில் வாங்கினார். செல்லதுரைக்கும் கீழ்புரம் சுப்புரமணிய பண்டிதரின் இடம் உள்ளது.

3. சுப்புரமணிய பண்டிதரின் இடத்தில் தற்போது அவரின் வாரிசுகள் வாடகைக்கு விட்டுவிட்டார்கள். மேல கொடிகாள் தெரு அகலம் சுமார் 20 அடி இருக்கும். தெரு கீழ்மேல் திசையில் உள்ளது. கீழ்மேல் தெருவில் தென்புரத்தில் பட்டறை உள்ளது என்றால் சரிதான். பட்டறை தவிர தெருவில் மீதம் இருக்கும் அனைத்தும் வீடுகள் என்றால் காலி மனையும் உள்ளது. மேல கொடிகாள் தெருவில் சுமார் 70-75 வீடுகள் இருக்கிறதா என்றால் வடக்கு பார்த்து 11 வீடுகளும், தெற்கு பார்த்து 13 வீடுகளும் உள்ளது. எனது ஓட்டு வீட்டிற்கு கிழக்கில் சித்ரா குடியிருக்கிறாரா என்றால் சரிதான் அவரது மாமனார் பாலகிருஷ்ணன் பெயரில் உள்ளது. வாதி மேல கொடிகாள் தெருவில் இடம் வாங்கிக்கொண்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 14-15 வருடம் இருக்கும் . அவர் யாரிடம் கிரயம் பெற்று வந்தார் என்றால் பழனி மகன் பாலகிருஷ்ணன் ஆசாரியார், ராமானுஜம் ஆசாரியாரிடமருந்து வாங்கியிருந்தார்.

4. வாதியின் கிரய பத்திரத்தை நான் படித்து பார்த்தது இல்லை. பத்திரத்தின் உண்மை தன்மை தெரியுமா என்றால் வாதி ஆசாரியார்களிடம் இருந்து சொத்து வாங்கியது உண்மை. வாதி 2014 இல் வீடு கட்டி வந்தார். வாதி வீடு கட்டும் போது பட்டறை இடம் காலியாக இருந்தது என்றால் நாங்கள் shed போட்டு வேலை செய்துக்கொண்டுதான் இருந்தோம்., மேற்சொன்ன shed ற்கு கதவு எண்.11, அந்த shed எப்போது போடப்பட்டது என்றால் பரம்பரையாக பல நாட்களாக இருந்தது ஆரம்பத்தில் குடிசையாகவும் பின்பு மேலே sheet போடப்பட்டது. பட்டறை எப்போது ஆரமிக்கப்பட்டது என்றால் 2014 ஆகும். 2014 க்கு பிறகு தான் மின் இணைப்பு வா'கனோமா என்றால் அதற்கு முன்பு மின் இணைப்பு 84 இருந்தது பின்னிட்டு எனது தகப்பனார் 3 phase மின் இணைப்பு பெற்றுவிட்டார்.

5. III phase மின் இணைப்பு பட்டறை தொழிலுக்காக வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் 06.03.2019 இல் இறந்தார். இறக்கும் போது அவருக்கு சுமார் 73-75 வயது இருக்கும். நானும் எனது தகப்பனாருடன் சேர்ந்து பட்டறை தொழில் பார்த்து வந்தேன் என்றால் சரிதான், அது எங்களுக்கு குல தொழில் சிறுவயதில் இருந்து பார்த்து வருகிறோம். நான் மின் இணைப்பிற்காக விண்ணப்பம் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் அனைத்தும் எனது தகப்பனார் தான் செய்தார். பட்டறைக்கு ஒரு மின் இணைப்பு.449 ஆகும். மின் இணைப்பு பெறுவதற்கு என்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்பது தெரியாது என்றால் சரிதான். மின்சார வாரியத்தில் பார்வையிட்டது எனக்கு தெரியும். யார் எப்போது பார்வையிட்டார்கள் என்றால் AE, AD வந்தார், 2014 இல் சுமார் 4 வது மாதத்தில் வந்தார்கள்.

6. பட்டறை வைப்பதற்கு NOC வாங்கவேண்டும் என்பது தெரியுமா என்றால் தற்போது தெரிந்துக்கொண்டேன் முன்பு தெரியாது.NOC பட்டறைக்காக வாங்கப்பட்டதா என்றால் தீயணைப்பு துறையிலும், பேரூராட்சி அலுவலகத்திலும் NOC வாங்கி EB துறையில் கொடுத்துள்ளதாக எனது அப்பா கூறியிருக்கிறார். குடியிருப்பு வாசிகளிடம் NOC வாங்கி EB யில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்திருக்கிறோம். மேற்சொன்ன NOC நகல் கள் என்னிடம் உள்ளதா என்றால் அப்பா தான் வைத்திருந்தார், நகல்கள் தேடிப்பார்த்ததில் கிடைத்தா என்றால் ஒரு சில மட்டும் கிடைத்தது. ஒரு சில என்வென்றால் பார்த்தால் தான் தெரியும், நிறைய நாட்கள் ஆகிவிட்டது நினைவு இல்லை. CPI கட்சியில் பொருப்பில் உள்ளேன் வட்ட செயலாளராக இருக்கிறேன். தெருவில் யார் யாரிடம் NOC -க்காக கையெழுத்து பெற்றார்கள் என்றால் அப்பாவிற்கு தான் தெரியும்.

7. அக்கம் பக்கத்தில் கையெழுத்து வாங்கினார் என்றாலும், வாதியிடமோ, சித்ராவிடமோ வாங்கினாரா என்றால் தெரியவில்லை. பட்டறைக்கான மிஷின்கள் எத்தனை horse power என்றால் 3 மோட்டர்கள் இருக்கிறதா என்றாலும் 3 hp, 4hp, 1 hp மோட்டர்கள் இருக்கிறது. 3 மோட்டருக்கும் ஒரே மின் இணைப்பு என்றால் சரிதான் ஆனால் ஒரே சமயத்தில் போடமுடியாது. எனது மர இழைப்பகத்திற்கு பெயர் என்வென்றால் ஸ்ரீநிரஞ்சன் மர இழைப்பகமாகும். மர இழைப்பகம் சிறு தொழிலில் உள்ளடங்கியது என்றால் சரிதான். பேரூராட்சியில் அனுமதி வாங்கவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. பேரூராட்சியில் NOC வாங்கியதாக அப்பா

கூறியிருக்கிறார். மர பட்டறை ஆரம்பத்தில் தெருவாசிகள் பிரச்சனை செய்தார்களா என்றால் சரியல்ல தனி நபர் தான் செய்தார். மாசு கட்டுபாடு வாரியத்தில் அனுமதி வாங்கப்பட்டதா என்றால் எனது அப்பாவிற்கு தெரியவில்லை, தற்போது எனக்கும் குடிசை தொழில் என்பதால் மாசு கட்டுபாடு வாரியத்தில் இருந்து அனுமதி பெற வேண்டும் என்ற விபரம் சரியாக தெரியவில்லை. மாவட்ட தொழில் மையத்தில் எனது தந்தை சான்றிதழ் வாங்கியிருக்கிறார்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.